சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.76/2020**

வாதி தரப்பு சாட்சி வா.சா.2 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. K. ரெஜினா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. கௌதமன் | த/பெ: |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 21.01.2026 | தாலுக்கா: |

முதல் விசாரணை...

நான் தற்போது திருவாரூர் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியமளிக்கிறேன். நான் திருவாரூர் வங்கி கிளையில் 29.05.2023 ல் பணிக்கு வந்தேன். பிரதிவாதி சின்னராஜுக்கு எங்கள் வங்கியில் கணக்கு உள்ளது. சம்மனில் கண்டபடி காசோலை எண் 142053, 142054 ஆகிய காசோலைகள் காணவில்லை என சின்னராஜ் 03.03.2020 அன்று வங்கிக்கு புகார் கொடுக்கப்பட்டதாக சொல்லி ஆவணம் எடுத்து வர உத்தரவிடப்பட்டிருந்தது. அவ்வாறு தேடிப்பார்த்ததில் வங்கி கோப்பில் புகார் கடிதம் எதுவும் இல்லை. 03.03.2020 அன்று எங்கள் வங்கியில் ராம்குமார் என்பவர் கிளை மேலாளராக பணியாற்றினார். ராம்குமார் தற்போது சென்னை வங்கி கிளையில் பணியாற்றி வருகிறார். சின்னராஜ் புகார் கொடுத்த 6 வருடங்களாகதான் கோப்புகள் தலைமையிடத்துக்கு அனுப்பி வைக்கப்படமாட்டாது. எங்கள் வங்கி கிளையில்தான் இருக்கும். சின்னராஜ் வங்கி சம்பந்தமான ஆவணங்கள் எடுத்து வந்துள்ளேன். காசோலை எண் 142053 எங்கள் வங்கிக்கு பணமாக்க வந்தபோது ( Kindly contact the drawer) என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டுள்ளது. வங்கி கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு காசோலை காணவில்லை என்றோ காசோலையை பணமாக்க வேண்டாம் என்றே தகவல் கொடுத்திருக்கும் பட்சத்தில் ( Kindly contact the drawer) என்று குறிப்பிட்டு காசோலையை திருப்புவோம்.

**குறுக்கு விசாரணை**

எங்கள் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர் வேண்டும் என்றே காசோலையை பணமாக்க வேண்டாம் என்று சொல்ல வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.